தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

21.03.2013 A.M

## பதற்ற சூழ்நிலைகளே ஆரோக்கியமற்ற வாழ்வுக்கு காரணம்: இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார்

பதற்ற சூழ்நிலைகளே ஆரோக்கியமற்ற வாழ்வுக்கு முக்கிய காரணம் என்று இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தெரிவித்தார்.

÷கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில், "பாரம்பரியம் போற்றுவோம்' என்ற தலைப்பில் வழக்குரைஞர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சியில் நம்மாழ்வார் பேசியது:

÷இன்றைய சூழலில் விஞ்ஞானம் என்ற பெயரில், நமது இயற்கை வளங்களை அழித்து வாணிபம் நன்றாக வளர்ந்துள்ளது. உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும் பொருளாக இருந்தாலும் காசு கொடுத்து வாங்கி விட்டோமே என்று பயன்படுத்துகிறோம். பச்சைக் காய்கறிகளை தவிர்த்து, வேக வைத்த செத்தவற்றை சாப்பிடுகிறோம்.

÷பதற்ற சூழ்நிலைகளே ஆரோக்கியமற்ற வாழ்வுக்கு முக்கிய காரணம். உடலில் ஏற்படும் வலி ஒரு நோயல்ல; உடல் தனது நிலையை குணப்படுத்த எடுக்கும் முயற்சியே அது. நல்ல உடல் நலத்தைப் பேண நான்கு வழிகள் உள்ளன. பசி வந்தால் மட்டும் சாப்பிடுங்கள்; தாகம் வரும்போதெல்லாம் தண்ணீர் குடியுங்கள்; சோர்வு வந்தால் படுத்துவிடுங்கள்; தூக்கம் வந்தால் தூங்கிவிடுங்கள். அந்த நேரத்தில்தான் உடல் தன்னை தயார் செய்து கொள்ளும்.

÷இப்போது விஞ்ஞானம் முன்னேறிவிட்டது என்கிறார்கள். அப்படியிருந்தால் ஏன் மருத்துவமனைகளில் கூட்டம் நிரம்பி வழிகிறது? நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று ஒளவையார் கூறியுள்ளார். நோய் வந்துவிட்டாலே செல்வம் போய் விட்டதே.

÷திருப்பூரிலிருந்து ஒரத்துப்பாளையம் அணை வரை நொய்யல் ஆற்றங்கரையில் 33 கி.மீ. தூரத்துக்கு சாயப்பட்டறைகளால் குடிநீர் சாக்கடையாக மாறியுள்ளது. வழியில் உள்ள அனைத்துக் கிணறுகளும் சாக்கடைகளாக மாறியுள்ளன. அனைத்தும் நமது செயல்.

÷நமது மூதாதையர்களின் ஞானத்துக்கு ஈடு, இணை இல்லை. அவற்றைப் பின்பற்றுங்கள்.

இலங்கையில் மனித உயிர்கள் கொல்லப்பட்டதற்கு தமிழகத்தில் நடைபெற்று வரும் போராட்டங்களால் நாடு உயிர்த் துடிப்போடு உள்ளது என்பதை உணர முடிகிறது. தீதும் நன்றும் பிறர் தர வாரா என்றார்.

## தர்பூசணி சாகுபடி முறைகள்!



தர்பூசணி சாகுபடி முறைகள் குறித்து சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு.பாலசுப்பிரமணியன் விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தகிக்கும் வெயிலுக்கும், தவிக்கும் தாகத்திற்கும் அருமருந்தாக திகழ்கிறது தர்பூசணி. நீர்ச்சத்து நிறைந்த இத் தர்பூசணி நிறைய மருத்துவப் பயன்களையும் கொண்டுள்ளது. சிட்ரல்லூஸ் லனாடஸ் என்ற தாவரவியல் பெயரைக் கொண்டுள்ள தர்பூசணி குர்குபிடேசியே குடும்பத்தைச் சேர்ந்தது.

ரகங்கள்: பி.கே.எம். 1, சுகர்பேபி, அர்காமானிக், டிராகன் கிங், அர்கா ஜோதி, அர்கா ஐஸ்வர்யா, அம்ருத் அபூர்வா, பூசா பெடானா, புக்கிசா, மைதிலா (மஞ்சள்), தேவயானி (ஆரஞ்சு) ஆகிய தர்பூசணி ரகங்கள் சாகுபடிக்கு ஏற்றவை.

அங்ககச் சத்து நிறைந்த, வடிகால் வசதியுள்ள, 6.5 முதல் 7.5 வரைய கார அமிலத்தன்மை கொண்ட மணற்சாரி நிலம் தர்பூசணிக்கு ஏற்றது. ஜனவரி முதல் மார்ச் வரை தர்பூசணி சாகுபடி செய்யலாம். நன்கு உழுது எட்டு அடி அகலப்பார் அமைத்து, பார்களுக்கிடையில் கால்வாய் பிடிக்க வேண்டும். ஏக்கருக்கு ஒன்றரை கிலோ விதை தேவைப்படும். கால்வாயை ஒட்டி மூன்று

அடி இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். குத்துக்கு இரண்டு செடி இருக்குமாறு, விதைத்த 15ஆம் நாள் கலைத்துவிட வேண்டும்.

விதைகளை ஊன்றுமுன் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பின்னர் வாரம் ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பது, நீர்ப் பயன்பாட்டைச் சிக்கனமாக்கி நிறைவான மகசூல் பெற உதவும். அடியுரமாக ஏக்கருக்கு 10 டன் தொழு உரமிட வேண்டும். மேலும் ஏக்கருக்கு 22 கிலோ மணிச்சத்து தரவல்ல 140 கிலோ சூப்பர் பாஸ்பேட், 22 கிலோ சாம்பல் சத்து தரவல்ல 40 கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை அடியுரமாக இட வேண்டும்.

விதைத்த 30ஆம் நாள் 22 கிலோ தழைச்சத்து தரவல்ல 50 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். எத்தரல் வளர்ச்சி ஊக்கியை 10 லிட்டர் நீருக்கு இரண்டரை மி.லி. அளவில் கலந்து, விதைத்த 15ஆம் நாள் முதல் வாரத்திற்கு ஒருமுறை என நான்கு முறை தெளித்து மகசூலை அதிகரிக்கலாம்.

பயிர்ப் பாதுகாப்பு: வண்டுகளை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மி.லி. மாலத்தியான் 500 ஈ.சி. தெளித்து கட்டுப்படுத்தலாம். நன்கு உழவு செய்து பழ ஈயில் கூட்டுப் புழுக்களை வெளிப்படுத்தி அழிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பழங்களை அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும்.

இப்பழ ஈயின் தாக்குதல், வெப்பக் காலத்தில் மிகக் குறைவாகவும், மழைக் காலத்தில் மிக அதிகமாகவும் இருக்கும். எனவே, அதற்கேற்ப விதைப்பு தேதியை நிர்ணயம் செய்ய வேண்டும்.

கருவாட்டுப் பொறி: ஒரு பாலித்தீன் பையில் 5 கிராம் நனைந்த கருவாடு, ஒரு மி.லி. டைக்குளோர்வாஸ் நனைந்த பஞ்சு வைத்து கருவாட்டுப் பொறிகளை ஏக்கருக்கு இருபது என்ற அளவில் வைத்து பழ ஈக்களைக் கவர்ந்து அழிக்கலாம்.

20 நாள்களுக்கு ஒரு முறை நனைந்த கருவாடும், வாரத்திற்கு ஒரு முறை டைக்குளோர்வாஸ் நனைந்த பஞ்சும் மாற்ற வேண்டும்.

லிண்டேன் பூச்சிக் கொல்லி மற்றும் தாமிர, கந்தகப் பூசணக் கொல்லிகள் தாவரநச்சாகப் பயிரைப் பாதிப்பதால் அவற்றை உபயோகிக்கக் கூடாது.

120 நாள்களில் ஏக்கருக்கு 15 டன் மகசூல் எடுக்கலாம். எனவே, விவசாயிகள் இந்த தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து, தர்பூசணியை சாகுபடி செய்து, சமுதாயத்திற்கு உதவுவதுடன் உயர் மகசூலும் உன்னத லாபமும் பெறலாம் என்றார் அவர்.

## மிளகாய், தக்காளியில் உயர் விளைச்சல் வேண்டுமா?



மிளகாய், தக்காளி சாகுபடியில் உயர் விளைச்சல் பெற நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்று வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

மிளகாய்: மிளகாய்ச் சாகுபடியில் உயர் விளைச்சல் பெற சரியான ரகங்களைத் தேர்வு செய்ய வேண்டும். கோ-1, கோ-2, கே-1, கே-2, எம்.டி.யு.-1, பி.கே.எம்.-1, பாலூர்-1 ஆகிய ரகங்களைத் தேர்வு செய்யலாம்.

ஒரு கிலோ விதைக்கு திரம் அல்லது காப்டான் 2 கிராம் என்ற அளவில் விதைகளுடன் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின்னர் விதைக்க வேண்டும். மேலும், அசோஸ்பைரில்லம் 400 கிராம் கலந்து விதை நேர்த்தி செய்வதால் தழைச்சத்தின் தேவையை 25 சதம் வரை குறைக்கலாம்.

குழித்தட்டு முறையில் நாற்றங்கால் மூலம் நல்ல தரமான நாற்றுகளைப் பெறலாம். நோய், பூச்சி தாக்குதல் இல்லாத நாற்றுகளைப் பெறுவதற்கும் சிறந்த வழியாக இருக்கும். அடியுரமாக தொழு உரம் 25 டன், யூரியா 30 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 60 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் 20 கிலோ இட வேண்டும். மேல் உரமாக 30 கிலோ யூரியாவை முறையே 30, 60, 90ஆவது நாள்களில் இட வேண்டும்.

பயிர் ஊக்கிகள்: பூக்கள், பிஞ்சுகள் உதிர்வதைத் தடுக்கவும், பூக்கள் விடுவதைத் தூண்டவும், நட்ட 60 அல்லது விதைத்த 100-ஆவது நாளில் ஒரு முறையும், மேலும் 30 நாள்களுக்குப் பிறகு ஒரு முறையும் ஒரு லிட்டர் தண்ணீரில் டிரையகான்டினால் (1.25 மி.லி.) கலந்து தெளிக்க வேண்டும். சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த நட்ட 15ஆம் நாள் முதல் ஒரு லிட்டர் தண்ணீரில் மீத்தைல் டெமான் (2 மி.லி.) கலந்து 15 நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் நனையும் கந்தகம் 2 கிராம் கலந்து தெளிக்க வேண்டும்.

காய் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த டைத்தேன் எம் 45 என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

இதன் மூலம் மிளகாயில் உயர் விளைச்சலும், கூடுதல் லாபமும் பெறலாம்.

தக்காளி: பி.கே.எம்-1, கே.பி.ஹெச்-1, கோ.பி.ஹெச்-2, யு.எஸ்.-618, ருச்சி, லட்சுமி ஆகிய ரகங்களைத் தேர்வு செய்யலாம்.

உர அளவு: மண் பரிசோதனை செய்து அதற்கேற்ப உரமிடுதல் வேண்டும். சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து நீர் வழி உரமிடுதல் மூலம் மகசூலை இரட்டிப்பு செய்ய முடியும்.

நடவு செய்த 30ஆவது நாளும், நன்றாகப் பூத்திருக்கும் நிலையிலும் 1.25 மில்லி கிராம் என்ற அளவில் வளர்ச்சி ஊக்கியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

துல்லிய பண்ணையத்தில் வீரிய ஒட்டு ரகங்களை நடவு செய்தால் ஹெக்டேருக்கு 150 டன்கள் வரை பெற முடியும். நடவு செய்த 9 மாதம் வரை அறுவடை செய்யலாம்.

பச்சைக் காய்ப்புழு, புகையிலைப் புழுக்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும்.

கோடை உழவு: கோடை உழவு செய்வதன் மூலம் கூட்டுப் புழுக்களை அழிக்கலாம். இனக்கவர்ச்சிப் பொறி பயன்படுத்தியும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். டிரைகோகிரம்மா என்னும் முட்டை ஒட்டுண்ணியை ஹெக்டேருக்கு 50 ஆயிரம் என்ற அளவில் பூக்கும் தருணத்தில் விட வேண்டும். குழித்தட்டுகளில் வளர்க்கப்பட்ட வாளிப்பான நாற்றுகளை நடவுக்குப் பயன்படுத்த வேண்டும்.

பழங்களை அறுவடை செய்த பிறகு அவற்றை தரம் பிரித்து பிளாஸ்டிக் கிரேடுகளில் நிரப்ப வேண்டும். பழங்களின் எடை ஒவ்வொரு ரகத்துக்கு மாறுபடும்.

எனவே, பழங்களை அளவு அடிப்படையில் விற்பனை செய்யக் கூடாது. எடை அடிப்படையில் விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் லாபம் பெற முடியும் என்று வேளாண்மைத் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

## மடி வீக்க நோயிலிருந்து கறவை மாடுகளைக் காப்பது எப்படி?



கறவை மாடுகளை அதிகளவில் தாக்கக் கூடிய நோய்களில் மடிவீக்க நோய் மிக முக்கியமானது. இந்த நோயிலிருந்து கறவை மாடுகளைப் பாதுகாக்க நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி நிர்வாகம் பல்வேறு வழிமுறைகளைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் கல்லூரியின் விரிவாக்கத் துறைப் பேராசிரியர்கள் நா.நர்மதா, மொ.சக்திவேல், ஜோதிலட்சுமி ஆகியோர் கூறியது:

அதிகளவில் பால் கொடுக்கும் கலப்பினக் கறவை மாடுகளை பெருமளவில் மடி வீக்க நோய் தாக்க வாய்ப்புள்ளது. இதனால், கறவைகளிடம் பால் உற்பத்தி குறைவதுடன் மிகுந்த பொருளாதார இழப்பையும் ஏற்படுத்துகின்றன.

இந்த நோயால் பால் மடியில் உள்ள திசுக்கள் பாதிப்படைந்து மடி வீக்கமாகவும், தடித்தும் காணப்படும். பால் திரிந்தோ அல்லது சில நேரங்களில் பாலுடன் ரத்தம் கலந்தோ, பால் தண்ணீர் போன்றோ காணப்படும். உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சை அளிக்காவிடில் மடியின் பால் சுரப்பிகள் நிரந்தரமாகக் கெட்டு பால் சுரக்கும் தன்மையை இழக்கக்கூடும்.

மடிவீக்க நோய் வந்தபின் சிகிச்சை அளித்து குணப்படுத்துவதைவிட சுகாதாரமான முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் இந்த நோய் கிருமிகளின் எண்ணிக்கையையும், தாக்கத்தையும் குறைத்து நோய் வராமல் தடுக்க முடியும்.

மாட்டுத் தொழுவத்தில் சாணம், சிறுநீர் தேங்க விடாமல் கவனிப்பதுடன், கிருமி நாசினி மருந்தைக் கொண்டு தொழுவத்தை சுத்தம் செய்ய வேண்டும்.

பால் கறப்பதற்கு முன்னும், பின்னும் பொட்டாசியம் பெர்மாக்கனேட், அயோடோபோர் ஆகிய கிருமி நாசினிகளைக் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

பால் கறப்பதற்கு பால் கறவை இயந்திரத்தைப் பயன்படுத்துவது உள்ளிட்ட நவீன மேலாண்மை முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாகவும் மடிவீக்க நோய் வராமல் தடுக்க முடியும் என்றனர்.

## கீழ் பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது பற்றி விவசாயிகள் கூட்டத்தை நடத்த வேண்டும்: உயர் நீதிமன்றம்



கீழ் பவானி பாசனப் பகுதி சாகுபடிக்குத் தேவையான தண்ணீரைத் திறப்பது பற்றி அப்பகுதி விவசாயிகளைக் கூட்டி கூட்டம் நடத்துமாறு தமிழக தலைமைச் செயலாளருக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் கீழ் பவானி ஆயக்கட்டுப் பகுதி விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். 4.12.2012 தேதியிட்ட பொதுப்பணித் துறை அரசாணையின்படி இந்தப் பகுதி விவசாயிகளுக்காக பவானி சாகர் அணையிலிருந்து மொத்தம் 7.35 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும். இந்தத் தண்ணீரானது மூன்று கட்டங்களாகத் திறக்கப்பட வேண்டும் என்று அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசாணையில் கூறப்பட்டுள்ளவாறு தங்கள் பாசனத்துக்கான தண்ணீரை திறந்து விடக் கோரி கீழ் பவானி பாசனப் பகுதி விவசாயிகள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் தலைமை நீதிபதி ஆர்.கே.அகர்வால், நீதிபதி என். பால் வசந்தகுமார் ஆகியோரைக் கொண்ட முதன்மை அமர்வில் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, கீழ் பவானி பாசனத்துக்காக மூன்று முறை தண்ணீர் திறந்துவிட வேண்டும். தற்போது மூன்றாவது பாசனத்துக்காக மார்ச் 31-ம் தேதிக்குள் தண்ணீர் திறந்து விட்டாக வேண்டும். ஆகவே, அணையின் நீர் இருப்பு மற்றும் பாசனத்துக்கு தேவையான நீரின் அளவு ஆகியவை குறித்து விவாதித்து தண்ணீர் திறப்பது பற்றி ஆலோசிக்க விவசாயிகளின் கூட்டத்தை மாநிலத் தலைமைச் செயலாளர் கூட்ட வேண்டும். அந்தக் கூட்டத்துக்கு பொதுப்பணித் துறை மற்றும் மின்சார வாரிய அதிகாரிகளையும் அழைக்க வேண்டும். மார்ச் 25-ம் தேதிக்குள் இந்தக் கூட்டத்தைக் கூட்டி பாசனத்துக்கான நீர் திறப்பது பற்றி ஒருமித்த முடிவை எட்ட வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மார்ச் 22-ம் தேதி (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி தலைமையில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது குறைகள் குறித்து மனுக்களை அளித்து தீர்வு காணலாம்.

இத்தகவலை, ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) செ.முத்தையா தெரிவித்துள்ளார்.

## நீண்ட இழை பருத்தியின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்: ஆட்சியர் டி.என்.ஹரிஹரன்

தமிழகத்தில் நீண்ட இழை பருத்தியில் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விருதுநகர் மாவட்ட ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் கேட்டுக் கொண்டார்.

விருதுநகரில் வேளாண்மைத் துறையின் சார்பில் மாநில அளவிலான பருத்தி சாகுபடி கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது. வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா தலைமை வகித்தார். ஆட்சியர் டி.என். ஹரிஹரன் பங்கேற்று கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசியதாவது: இந்தியாவின் வணிகப் பயிர்களில் பருத்தி

முக்கியப் பயிர். ஒன்பதுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் 101 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் 295 லட்சம் பேல்கள் வரையில் பருத்தி உற்பத்தியாகிறது. தமிழகத்தில் பருத்தி பல்வேறு காலச்சூழ்நிலைகளில் பயிர் செய்யப்படுகிறது. அவை, குளிகால இறவை பருத்தி, குளிர்கால மானாவாரி பருத்தி, கோடைக்கால இறவை பருத்தி, நெல் தரிசு நிலங்களில் பருத்தி ஆகும்.

தற்போது விவசாயப் பணிகள் மேற்கொள்ள ஆள்கள் பற்றாக்குறையாலும், அதிகமான பராமரிப்பு செலவு, நிரந்தர விலை இல்லாதது போன்றவைகளால் பருத்தி பயிரிடப்படும் பகுதிகள் மக்காச்சோளம், நெல் சாகுபடி செய்யும் பகுதிகளாக மாறிவருகிறது. இந்தியாவின் மூன்றில், இரண்டு பங்கு அந்நியச் செலவாணி ஈட்டி தருவது நூற்பாலைத்துறை ஆகும். இந்த நாட்டில் பருத்தி மற்றும் அதைச் சார்ந்த மதிப்பூட்டப்பட்ட பொருள்களின் மூலமாக ரூ. 95 ஆயிரம் கோடி அன்னியச் செலவாணி வருவாய் கிடைக்கிறது. இந்தியாவின் மொத்த நூற்பாலைகளில், மூன்றில் இரண்டு பங்கு நூற்பாலைகள் தமிழகத்தில் செயல்படுகிறது. தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு சராசரியாக ஆண்டுக்கு 100 லட்சம் பேல்கள் பருத்தி தேவைப்படுகிறது. இந்நிலையில் இங்கு மொத்த பருத்தியின் உற்பத்தி 1.94 லட்சம் பேல்கள் ஆகும். அதனால், தமிழகத்தில் பருத்தியின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது அவசியம் ஆகும்.

அதிலும், பருத்தியின் மிக நீண்ட இழையின் தேவையானது 40 லட்சம் பேல்கள் ஆகும். அதையடுத்து மீதமுள்ளவைகள் 60 லட்சம் பேல்கள் நடுத்தரம், உயர் நடுத்தர வகை பருத்தியாகும். தமிழகத்திலுள்ள நூற்பாலைகள் நடுத்தர இழை வகை பருத்தியின் தேவைக்கு வெளிமாநிலங்களைச் சார்ந்தே இருக்க வேண்டியுள்ளது. இதனால் போக்குவரத்து செலவால், நூல் நூற்கும் செலவும் அதிகரிக்கிறது.

தற்போது வடமாநிலங்களில் நூற்பாலைகள் அதிகரித்து வருவதால், தமிழக ஆலைகளுக்கு தரமான பருத்தி கிடைப்பதில் பற்றாக்குறை இருக்கிறது. தென்மாநிலங்களில் மட்டுமே நீண்ட இழை பருத்தியை உற்பத்தி செய்வதற்குகேற்ப தட்பவெப்ப சூழ்நிலை உள்ளது. அதனால், தமிழகத்தில் இப்பருத்தியின் பயிரிடும் பரப்பளவை அதிகரிக்கச் செய்வதற்கு வேளாண்மைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் கேட்டுக் கொண்டார்.

கருத்தரங்கில், வேளாண்மை துணை இயக்குநர் (பருத்தி, கரும்பு) ஆர்.ஞானஒளி, மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் எ.எச்.பிரசாத், விருதுநகர் மாவட்ட பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் எம்.சாந்தி, ஆருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் வி.ராஜராம் உள்ளிட்டோர் பல்வேறு தலைப்புகளில் பருத்திச் சாகுபடி தொழிற்நுட்பங்கள் குறித்துப் பேசினர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 39.72 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 39.72 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 658 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.41 டி.எம்.சி.

இன்றைய வேளாண் செய்திகள்

21.03.2013 A.M

## சாத்தையாறு அணை வறண்டதால் விவசாயப்பணி பாதிப்பு 3 ஆயிரம் எக்டேர் நிலத்தில் பாசன வசதி இல்லை

பாலமேடு:மதுரையில் பருவமழை பொய்த்ததால் சாத்தையாறு அணை வறண்டு குட்டை போல் காட்சியளிக்கிறது. அணை நீரில் பாசன வசதி பெறும் 11 கண்மாய்களும் வறண்டன. இதனால், மூவாயிரம் எக்டேர் நிலத்தில் விவசாயப் பணிகள் நடக்கவில்லை.இந்த அணையின் மொத்த கொள்ளளவு 29 அடி. நீர்ப்பிடிப்பு பகுதிகள் 150 எக்டேர். சிறுமலை, காட்டுநாயக்கன் ஓடை, மஞ்சமலை ஓடையில் இருந்து அணைக்கு நீர்வரத்து உள்ளது. அணை நீர் மூலம் எர்ரம்பட்டி, சின்னணம்பட்டி, கோவில்பட்டி, ஆதனூர் (கட்டிக்காரன் கண்மாய், குறவன்குளம்), கோணப்பட்டி உட்பட 11 கண்மாய்கள் பாசன வசதி பெறுகிறது.குட்டை போலானது அணை: அணை நீர்ப்பிடிப்பு பகுதியில், 2011ல், பெய்த பருவமழையால் அணை நிரம்பியது. அதைத்தொடர்ந்து பாசன வசதி பெறும் 11 கண்மாய்கள் நிரம்பி, விவசாயப் பணிகள் நடந்தன. இந்தாண்டு போதுமான அளவு மழை பெய்யாததால் அணை நிரம்பவில்லை. விவசாயம் நடக்கவில்லை. நீர்ப்பிடிப்பு பகுதி வறண்டு குட்டை போல் காட்சியளிக்கிறது. அணையில் இருந்து தண்ணீரை வெளியேற்றும் நான்கு ஷட்டர்கள் துருப்பிடித்திருந்தன. ஷட்டர்களில் நீர்கசிவு இருந்தது. அணையில் தண்ணீர் இல்லாததால், ஷட்டர்கள் 40 லட்சம் ரூபாயில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.11 கண்மாய்கள் வறண்டன: குட்டை போல் காட்சியளிக்கும் அணையில் கால்நடைகள் குடிக்கும் அளவுக்கு மட்டுமே தண்ணீர் உள்ளது. அணை நீரில் பாசன வசதி பெறும் 11 கண்மாய்களும் வறண்டு விட்டன. இதனால், மூவாயிரம் எக்டேர் நிலத்தில் விவசாயப் பணிகள் நடக்கவில்லை. கோடை வெயில் கடுமையாக இருப்பதால் சில நாட்கள் மட்டுமே கால்நடைகளுக்கு தண்ணீர் இருக்கும். அணை நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்தால் மட்டுமே அணை முழு கொள்ளளவை எட்டும். மழை பெய்யாத பட்சத்தில் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் சிக்கல் தான்

## கால்நடை தீவனம் வளர்க்க ரூ.3 ஆயிரம் மானியம்

சிவகங்கை:""கால்நடை தீவனம் வளர்ப்போருக்கு, ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படும்," என, கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் பாலகிருஷ்ணன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: மாவட்டத்தில், 12 லட்சத்து 40 ஆயிரத்து 86 வெள்ளாடு, செம்மறி ஆடுகளும், 2 லட்சத்து 30 ஆயிரத்து 309 மாடுகளும் வழங்கப்படுகின்றன. இவைகளுக்கு கோடை காலத்தில் தீவன தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க, 200 ஏக்கர் நீர் பாசன வசதியுள்ள இடங்களில் காராமணி, சோளம் பயிரிட்டு கால்நடைகளுக்கு வழங்க உள்ளோம். இதற்காக, 0.25 ஏக்கரில் இவற்றை பயிரிடும் கால்நடை வளர்ப்போருக்கு, ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படும். இதற்கு, சிவகங்கை, காரைக்குடி கால்நடை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம். அரசு கால்நடை மருந்தகங்களில் உள்ள தொட்டிகளில் குடிநீர், கால்நடைகளை குளிப்பாட்ட, ஆழ்குழாய் கிணறு உள்ள கால்நடை நிலையங்களில் நீர் நிரப்பி வைக்கப்பட்டுள்ளது. வறட்சியால் ஏற்படும் சத்து குறைவு , குடற்புழு தாக்கம், நீர்சத்து குறைவுகளை சமாளிக்க, குடற்புழு நீக்க மருந்துகள், திரவ சத்து மருந்துகள், தாது உப்புகள் இருப்பில் உள்ளன. கால்நடை வளர்ப்போர் இவற்றை பயன்படுத்திக்கொள்ளலாம், என்றார்

## பருத்தி உற்பத்தியை அதிகரியுங்கள் விருதுநகர் கலெக்டர் வேண்டுகோள்

விருதுநகர்:""பருத்தி உற்பத்தியை அதிகரிக்க, விவசாயிகள் முன் வர வேண்டும்," என, கலெக்டர் ஹரிஹரன் கேட்டுகொண்டார். விருதுநகரில் நடந்த மாநில பருத்தி உற்பத்தி கருத்தரங்கில் பங்கேற்ற அவர் பேசியதாவது: வணிகப்பயிர்களில் பருத்தி முக்கிய பங்கு வகிக்கிறது. ஒன்பதுக்கு மேற்பட்ட மாநிலங்களில் 101 மில்லியன் எக்டேர் பரப்பளவில் 295 லட்சம் பேல்கள்(ஒரு பேல் 170 கிலோ) உற்பத்தியாகிறது. ஆதார நிலை, பணியாளர் பற்றாக்குறையால் பருத்தி சாகுபடி குறைகிறது. இந்தியாவில் மூன்றில் இரண்டு பங்கு அன்னிய செலாவணி ஈட்டுவது நூற்பாலைத்துறை. இந்தியாவில் உள்ள 2,500 நூற்பாலைகளில் மூன்றில் இரண்டு பங்கு தமிழ்நாட்டில் தான் உள்ளது. இந்த நூற்பாலைகளுக்கு 100 லட்சம் பேல்கள் தேவைப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் 1.94 லட்சம் பேல்கள் தான் உற்பத்தியாகிறது. வெளி மாநிலங்களை எதிர்பார்க்கும் நிலை உள்ளது. தமிழகத்தில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் முன் வர வேண்டும், என்றார். பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர்கள் ஏ.எச்.பிரசாத்(கோவை) எம்.சாந்தி(ஸ்ரீவில்லிபுத்தூர்) வேளாண் இணை இயக்குனர் சுப்பையா கலந்து கொண்டனர்.

## நீரின்றி கருகிய பாசிப்பயறு செடிகள்: மாகரல் விவசாயிகள் வேதனை

காஞ்சிபுரம்: போதிய மழை இல்லாததால், மாகரல் கிராமத்தில், மானாவாரி பயராக பயிரிடப்பட்ட பாசிப்பயறு செடிகள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த ஆண்டு, பருவ மழை பொய்த்து போனதால், பெரும்பாலான ஏரிகள் வறண்டு காணப்படுகின்றன. ஏரி நீரை ஆதாரமாக கொண்டு, சாகுபடி செய்யப்படும் விளை நிலங்கள், தற்போது தரிசு நிலங்களாக மாறி உள்ளன.

கருகல் : சில விவசாயிகள், நிலத்தை வீணாக, தரிசாக விட விரும்பாமல், மானாவாரி பயிராக எள், வேர்கடலை, காராமணி, உளுந்து, பாசிப்பயிறு, போன்றவற்றை சாகுபடி செய்து வருகின்றனர். இப்பயிர்கள், விதைக்கப்பட்ட நாளிலிருந்து அறுவடை வரை, மூன்று அல்லது நான்கு முறை மழை பெய்தால் தான், விவசாயிகள் மகசூல் பெற முடியும்.

தண்ணீர் இல்லை : காஞ்சிபுரம் அடுத்த மாகரல் கிராமத்தில், 10க்கும் மேற்பட்ட விவசாயிகள், தங்கள் நிலங்களில் பாசிப்பயறை, கடந்த ஜனவரி மாதம் விதைத்தனர். இப்பயிர், 70வது நாளில் அறுவடைக்கு தயராகிவிடும். அதன்படி, இம்மாதம் முதல் வாரத்தில், பாசி பயிறு அறுவடை செய்திருக்க
வேண்டும். ஆனால், போதிய மழை இல்லாதால், பயிர்கள் அனைத்தும் கருகிய நிலையில் காணப்படுகின்றன.

இது குறித்து, மாகரல் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: குறுகிய கால பயிரான பாசி பயிறை, குறைந்த செலவில் விதைத்தோம். இதற்கு, இரண்டு அல்லது மூன்று மழை பெய்யும் என, காத்திருந்தோம். பனி பொழிந்து ஓரளவு செடிகளை காப்பாற்றியது. பிப்ரவரி மாதம் இறுதியில் செடியில் காய்கள் பிடித்தன. அவை முதிர்ச்சியடையும் நேரத்தில், அதிக வெயில் காரணமாக, செடிகள் காய்ந்து போயின.
காசு கொடுத்து தண்ணீர் பாய்ச்ச நினைத்தாலும், எங்கள் நிலம் அருகில், பாசனக் கிணறுகளே இல்லை. இதனால், வேறு வழியின்றி செடிகளை விட்டு விட்டோம். ஆடு, மாடுகள் மேய்கின்றன,' என வேதனையுடன் தெரிவித்தனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வேளாண்மை விரிவாக்க துணை திட்ட அலுவலகம் மூடல்: இடுபொருட்களுக்கு விவசாயிகள் பரிதவிப்பு

சுங்குவார்சத்திரம்: எடையார்பாக்கம் கிராமத்தில், வேளாண்மை விரிவாக்க துணை திட்ட அலுவலக கட்டடம் சிதிலமடைந்ததால், மூடப்பட்டுஉள்ளது. இதனால், விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

ஸ்ரீபெரும்புதுார் வட்டத்தில், ஸ்ரீபெரும்புதுார், மதுரமங்கலம், சுங்குவார்சத்திரம், வல்லம், படப்பை, செரப்பணஞ்சேரி, தண்டலம், மாங்காடு, குன்றத்துார் என, ஒன்பது வருவாய் பிர்காக்கள் அமைந்துள்ளன. இதில், ஸ்ரீபெரும்புதுார், குன்றத்துார் என, இரண்டு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் உள்ளன.

இவற்றின் மூலம், விவசாயிகளுக்கான உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், விதைகள், விவசாய இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. விவசாயம் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

அரசு அறிவிக்கும் வேளாண் திட்டங்களை, பொதுமக்களிடம் கொண்டு செல்லும் பணியை, வேளாண் விரிவாக்க மைய அலுவலர்கள் மேற்கொள்கின்றனர்.

அவர்களுக்கான அலுவலகங்கள், ஸ்ரீபெரும்புதுார், குன்றத்துார் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் அமைந்து உள்ளன. வேளாண் உதவி இயக்குனர் மேற்பார்வையில், வேளாண் அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள், கிடங்கு மேலாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் இங்கு பணிபுரிகின்றனர்.

திறப்பு : ஸ்ரீபெரும்புதுார் வட்டார வேளாண்மை அலுவலகம் கட்டுப்பாட்டில், 58 கிராம ஊராட்சிகள் உள்ளன. இவற்றில் பிச்சிவாக்கம், மதுரமங்கலம், எடையார்பாக்கம், கோட்டூர், குணகரம்பாக்கம், ஆகிய கிராமங்களிலிருந்து, பொது மக்கள் நீண்ட தொலைவில் உள்ள ஸ்ரீபெரும்புதுார் வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு வந்து, உரங்கள், விதைகள், விவசாய இடுபொருட்கள், ஆகியவறறை வாங்கி செல்வது சிரமமாக இருந்து வந்தது. எனவே, எடையார்பாக்கம் கிராமத்தில், ஊராட்சிக்கு சொந்தமான இடத்தில், 30 ஆண்டுகளுக்கு முன், துணை வேளாண்மை விரிவாக்க மைய கட்டடம் கட்டப்பட்டது. இதில், கிடங்கு மேலாளர், அலுவலக உதவியாளர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள், ஆகியோர் பணிபுரிந்து வந்தனர். இப்பகுதியை சுற்றியுள்ள விவசாயிகள் பயன்பெற்றனர்.

தவிப்பு : சில ஆண்டுகளுக்கு முன், இக்கட்டடம் சிதிலமடைந்தது. அதைத் தொடர்ந்து அங்கு செயல் பட்ட, துணை வேளாண்மை மையம் மூடப்பட்டது. தற்போது விவசாயிகள், தங்களுக்கு

தேவையான உரங்கள், விதைகள், ஆலோசனைகள் பெற, எப்போதும் போல், 30 கி.மீ., தூரம் கடந்து, ஸ்ரீபெரும்புதூர் அலுவலகத்திற்கு வர வேண்டியுள்ளது. விவசாய விரிவாக்க துணை மையத்திற்கு கட்டடம் இல்லாத தால், உரங்கள், விதைகள், ஆகியவற்றை பாதுகாக்கவும், விவசாயிகளுக்கு தேவையான நேரத்தில் வழங்கவும், விவசாய அலுவலர்களால் இயலவில்லை. எனவே, எடையார்பாக்கம் துணை வேளாண்மை மைய கட்டடத்தை சீரமைக்க வேண்டும். இல்லையெனில், புதிய கட்டடம் கட்ட வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கரும்பு அரவை திடீர் நிறுத்தத்தால் விவசாயிகள்...தவிப்பு : தனியார் ஆலைகளுக்கு கரும்பை கொடுக்க முடிவு

திருவாலங்காடு: திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கரும்பு அரவை நிறுத்தம் குறித்து முறையாக தெரிவிக்கப் படாததால், விவசாயிகள் அதிர்ச்சி அடைந்து உள்ளனர். நூற்றுக்கணக்கான விவசாயிகள் தங்களின் கரும்பை தனியார் ஆலைக்கு கொண்டு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அக். 23ம் தேதி, கரும்பு அரவை துவங்கியது. முதலில், 4 லட்சம் டன் என, அரவை இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. பின்னர், 3.25 லட்சம் டன்னாக குறைக்கப்பட்டது. ஆனால், இந்த இலக்கு எட்டப்படுவதற்கு முன்பே, கடந்த 18ம் தேதி, அரவை பணி திடீரென நிறுத்தப்பட்டது. இதுவே கடந்த ஆண்டு, ஏப்ரல் 2ம் தேதி வரை அரவை நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அரவை வழகத்தைவிட முன்பே நிறுத்தப்பட்டதால், இந்த பருவத்தில் 2.58 லட்சம் டன் மட்டுமே அரைக்கப்பட்டு உள்ளது. இதற்கு முறையான அறிவிப்பும் இல்லாததால், நூற்றுக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

விவசாயிகள் புலம்பல் : இது குறித்து, திருத்தணி தரணிவராகபுரம் பகுதியை சேர்ந்த விவசாயி, ராமச்சந்திரன் கூறியதாவது: 10 ஏக்கர் பரப்பில் கரும்பு பயிர் செய்து, ஆலையில் பதிவு செய்தேன். இம்மாதம், கரும்பு வெட்டுவதற்கு ஆர்டர் கொடுத்தனர். அப்போது, இம்மாதம் இறுதி வரை கரும்பு அரவை செய்யப்படும் என, கூறினர். ஆனால், சில நாட்கள் கழித்து, 22ம் தேதி அரவை நிறுத்தப்படும் என, வாய்மொழியாக தெரிவித்தனர். பிறகு, 20ம் தேதி என, வாய்மொழியாக கூறி, கடந்த, 18ம் தேதியே திடீரென ஆலையை மூடிவிட்டனர். ஐந்து ஏக்கர் கரும்பு அப்படியே உள்ளது. இந்த கரும்பை வேலூர், ஆம்பூர் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கொண்டு செல்லுமாறு அதிகாரிகள் கூறுகின்றனர். அங்கு சென்றால், உரிய நேரத்தில் கரும்பு இறக்காமல், நாட்களை கடத்துவர். இதனால் கரும்பின் ஈரப்பதம் குறையும் என்பதால், நஷ்டம் அடைந்தாலும்

பரவாயில்லை என, தனியார் ஆலைக்கு ஓட்டவேண்டி உள்ளது. என்னைப்போல் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.
இவ்வாறு அவர் கூறினார்.

அதிகாரி சமாளிப்பு : இது குறித்து, திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக அதிகாரி, பாஸ்கர் கூறியதாவது: கரும்பு அரவை, இம்மாதம், 18ம் தேதியுடன் முடிவடைந்தது. இதை அந்தந்த கோட்ட கரும்பு அதிகாரி மூலம் விவசாயிகளுக்கு தகவல் கொடுக்க உத்தரவிட்டேன். நாங்கள் பதிவு செய்த அனைத்து விவசாயிகளின் கரும்பை அரவை செய்து விட்டோம். சிலர், பதிவு செய்யாத விவசாயிகளின் கரும்பை முதலில் ஓட்டி விட்டனர். இதனால் சில விவசாயிகளின் கரும்பு நிலுவையில் இருக்கும். அந்த கரும்பைக் கூட, வேலூர் மாவட்டம், திருவலம், ஆம்பூர் ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு எடுத்து செல்வதற்கு, வாகன வசதி ஏற்பாடு செய்து கொடுத்து உள்ளோம். விவசாயிகள் தனியார் ஆலைக்கு ஓட்டினால், நாங்கள் பொறுப்பு ஏற்க முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

10 ஆயிரம் ஏக்கர் : திருவாலங்காட்டில், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது.திருத்தணி, அத்திமாஞ்சேரிபேட்டை, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு, அரக்கோணம், திருவாலங்காடு, சாலை, கனகம்மாசத்திரம் ஆகிய எட்டு கோட்டங்களில் இருந்து விவசாயிகள் கரும்பை லாரி மற்றும் டிராக்டர்கள் மூலம் கொண்டு வருகின்றனர். மொத்தம், 10,365 ஏக்கர் பரப்பளவில், 3,900 விவசாயிகள் கரும்பு பயிர் செய்கின்றனர்.

## விவசாய வேலை இல்லாததால் கரி தயாரித்து வருவாய் ஈட்டும் இருளர்கள்

மடுகூர்: விறகுகளை மூட்டம் போட்டு கரி தயாரித்து, விற்பனை செய்து, வருவாய் ஈட்டுகின்றனர் இருளர்கள். விவசாய கூலி வேலை கிடைக்காததால், இதன் மூலம், தங்கள் வயிற்றுப் பிழைப்பு நடக்கிறது என, விரக்தியுடன் கூறுகின்றனர். ஆர்.கே.பேட்டை அடுத்து உள்ளது மடுகூர் கிராமம். இங்குள்ள ஓடைப்பகுதியில், அருந்ததியர் குடியிருப்பு உள்ளது. இங்கு, 18 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். அரிசி ஆலைகளில் நெல் அவிப்பது மற்றும் விவசாய கூலி வேலை செய்து வருகின்றனர்.
தற்போது, நவீன அரிசி ஆலைகள் மூலமாக நெல் அவிக்கப்படுகிறது. மேலும், விவசாய நிலங்கள் பிளாட் போட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், இவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. வயிற்றுப் பிழைப்புக்காக, மாற்றுத் தொழில் தேட வேண்டிய கட்டாய

நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.
இந்நிலையில், விவசாய நிலங்களை சமன் செய்யும் போது அதில் இருக்கும் மரங்கள் வெட்டப்படுகின்றன. இந்த மரங்களின் வேர் பகுதிகள் தோண்டி எடுக்கப்படுவதில்லை. இந்த வேர் பகுதியை, இருளர்கள் தோண்டி எடுத்துச் செல்கின்றனர். நிலம் சீரடைந்தால் போதும், வேர்களுக்கு பணம் வேண்டாம் என, நிலத்தின் உரிமையாளர்கள் பணம் வாங்க மறுத்து விடுகின்றனர். இருளர்கள், இலவசமாக கிடைக்கும் மரத்தின் வேர்களை தோண்டி, லாரிகளில் எடுத்துச் செல்கின்றனர். இந்த வேர் பகுதியை பிளந்து, விறகுகளாக ஆக்குவது சிரமம் என்பதால், அவற்றை மூட்டம் போட்டு கரியாக ஆக்குகின்றனர். மூட்டம் என்பது செங்கல் சூளை போன்ற அமைப்பு. பக்குவமாக எரித்து, கரி தயார் செய்கின்றனர்.
ஒரு மூட்டை கரி, 350 முதல், 550 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஓட்டல்கள், டீக்கடை மற்றும் லாண்டரி சலவைத் தொழிலாளர்கள், கரியை வாங்கிச் செல்கின்றனர். பாய்லர்கள் மற்றும் லாண்டரி பெட்டிகளுக்கு கரி பயன்படுத்தப்படுகிறது.
இதுகுறித்து, இப்பகுதியைச் சேர்ந்த சண்முகம் என்பவர் கூறுகையில், ""வேர்களை தோண்டி எடுப்பதற்கான உடலுழைப்பு மற்றும் வண்டி வாடகை எல்லாம் போக, அதிகமாக மிச்சம் ஆவதில்லை. ஏதோ வயிற்றுப் பசியை போக்க, கரி வியாபாரம் உதவுகிறது" என்றார்.

## தாவரங்கள் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம்

நாமக்கல்: கொல்லிமலை வாழவந்தி நாட்டில், சென்னை எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், தாவரங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர் உரிமைச் சட்டம் குறித்த ஒரு நாள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது.
நாமக்கல் நபார்டு வங்கி துணை பொது மேலாளர் பூவராகவன் தலைமை வகித்தார். ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி கீதாராணி கருத்தரங்கை துவக்கி வைத்தார்.
வேளாண் துறை உதவி இயக்குனர்கள் சௌந்தரராஜன், அசோகன், ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி இஸ்ரேல் ஆலிவர் கிங் ஆகியோர் பேசினர். கருத்தரங்கில், தாவரங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர் உரிமைச் சட்டம் குறித்த விளக்கம், விவசாயிகள் தங்கள் பயிர் ரகங்களை எவ்வாறு பதிவு செய்ய வேண்டும், பராம்பரிய நெல், சிறுதானியம், குழு பணப் பயிர் ஆகியவை குறித்து விளக்கிக் கூறப்பட்டது.
விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண் துறை அலுவலர்கள், விவசாயிகள் என, ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## யானைகளிடம் இருந்து பயிர்களை காக்க டிராக்டர் விளக்குகளை எரிய விடும் விவசாயிகள்

ஓசூர்: ஓசூர் அருகே கிராமங்களில் யானைகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க விவசாயிகள் இரவு முழுவதும் வயல்கள் நடுவே டிராக்டரை ஸ்டார்ட் செய்து நிறுத்தி, முகப்பு விளக்கை எரிய விட்டு செல்கின்றனர்.
ஓசூர் அடுத்த சானமாவு, போடூர் வனப்பகுதியில் கடந்த ஒரு வாரமாக, 30 யானைகள் முகாமிட்டுள்ளன. இந்த யானைகள், தினம் இரவு சானமாவு, போடூர், அழியாளம், பீர்ஜேப்பள்ளி உள்ளிட்ட தென்பெண்ணை ஆற்று படுகை கிராமங்களில் புகுந்து விவசாய பயிர்களை சாப்பிடுகின்றன.
அதிகாலை, தென்பெண்ணை ஆற்றில் இறங்கி ஆனந்த குளியல் போட்டுவிட்டு, காலை, 7 மணிக்கு காடுகளுக்கு மீண்டும் சென்று விடுகின்றன. வனப்பகுதியில் தண்ணீருக்கும், உணவுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், வனத்துறையினர் விரட்டினாலும், மீண்டும் மீண்டும் யானைகள் கிராமங்களுக்கு படையெடுத்து வருகின்றன.
விவசாயிகள், விளைபயிர்களை, விவசாய தோட்டங்களை யானைகளிடம் இருந்து பாதுகாக்க இரவு முழுவதும் விவசாய நிலங்கள், தோட்டங்களுக்கு மத்தியில் டிராக்டர்களை ஸ்டார்ட் செய்து நிறுத்தி, முகப்புவிளக்கை இரவு முழுவதும் எரிய விடுகின்றனர்.
யானைகள், இரவு வயல்களுக்கு வரும்போது அவற்றின் கண்ணுக்கு தூரத்தில் இருந்து பார்க்கும்போது டிராக்டர் வெளிச்சம் தீ எரிவது போல் தெரிவதால் திரும்பி சென்று விடுகின்றன. இந்த யானைகளை விரட்டும் இந்த நூதன யுக்தியால் அவைகள் திரும்பி செல்வதால், தென்பெண்ணை ஆற்று விவசாயிகள் டிராக்டர்களை வாடகைக்கு பிடித்து வயல்கள் நடுவே நிறுத்தி விவசாய பயிர்களை பாதுகாக்கின்றனர். இதனால், விவசாயிகளுக்கு கூடுதல் செலவு ஏற்பட்டு வருகிறது.
* ஐந்து ஏக்கர் நெல் நாசம்: காமன்தொட்டியை சேர்ந்த ரமேஷ், வெங்கட்ராஜ், ரங்கநாத் ஆகியோருக்கு சொந்தமான ஐந்து ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்துள்ளனர். நெல் அறுவடைக்கு தயராக உள்ள நிலையில், நேற்று முன்தினம் இரவு யானைகள் கூட்டம், வயல்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்தது.
ஓசூர் அடுத்த போடூர் வனப்பகுதியில் முகாமிட்டுள்ள, 30 யானைகள் நேற்று மாலை திடீரென கிருஷ்ணகிரி-பெங்களூரு சாலையை கடக்க முயற்சி செய்தன. அதிர்ச்சியடைந்த வனத்துறையினர், யானைகளை சாலையை கடக்க விடாமல் பட்டாசு வெடித்து விரட்டினர்.

## கோடையில் பிசுபிசுத்த எலுமிச்சை விலை அதிக செலவால் வியாபாரிகள் கவலை

ஈரோடு: கோடை வெயில் துவங்கியும் எலுமிச்சை விலை உயராததால், வியாபாரிகள் கவலையில் உள்ளனர்.
திருச்சி, திண்டுக்கல், நெல்லை, புளியங்குடி, சங்ககிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஆந்திராவில் அதிக பரப்பில் எலுமிச்சையை, விவசாயிகள் உற்பத்தி செய்து, மாநிலம் முழுவதும் விற்பனைக்கு

அனுப்புகின்றனர்.
எலுமிச்சை பழத்தில், விட்டமின் "சி', நீர்ச்சத்தும் உள்ளதால், கோடையில் எலுமிச்சையின் விற்பனையும், விலையும் விண்ணை தொடும். கோவில் விசேஷங்கள், வீட்டு சுபகாரிய நிகழ்ச்சிகளில், எலுமிச்சை முக்கியத்துவம் பெறுவதால், எக்காலத்திலும் எலுமிச்சையின் விலை ஜோராக நடக்கும். தமிழகத்தில் எலுமிச்சை வரத்து குறைந்து, ஆந்திராவில் இருந்து, கணிசமான எலுமிச்சை மட்டுமே, ஈரோட்டுக்கு விற்பனைக்காக வருகிறது. எனவே, கோடையில் வி லை உயர வாய்ப்பில்லை, என வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
எலுமிச்சை வியாபாரி ஆறுமுகம் கூறியதாவது:தமிழகத்தில் பருவமழை பொய்த்ததால், எலுமிச்சை உற்பத்தி பாதித்தது. ஆந்திரா மாநிலங்களில் இருந் து, ஈரோடு மார்க்கெட்டுக் கு, விவசாய மற்றும் நாட் டு எலுமிச்சை அதிகமாக வரத்தாகிறது. கோடை கா லத்தில் எலுமிச்சையின் வி லை, ஐந்து முதல் ஆறு ரூ பாய் வரை இருக்கும். இந்தாண்டு கோடை கால ம் துவங்கியும், எலுமிச்சையின் விலை உயரவில்லை.
நாட்டு எலுமிச்சை ஒரு மூடை (2,000 எண்ணிக்கை அடங்கியது), 7,200 ரூபாய்க்கும், விவசாய எலுமிச்சை ஒரு மூடை, 6,800 ரூபாய்க்கும் வாங்கி வருகிறோம். போ க்குவரத்து செலவு அதிகமானதால், எலுமிச்சை மூடைக்கு கூடுதல் விலை கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஈரோட்டில் ஒரு எலுமிச்சை, மூன்று முதல், நான்கு ரூபாய் வரை மட்டுமே விற்பனையாகிறது, என்றார்.

## கரும்பு சீஸன் நிறைவு; நாட்டு சர்க்கரை உற்பத்தி பாதிப்பு

கோபிசெட்டிபாளையம்: கரும்பு சீஸன் நிறைவு மற்றும் கரும்பு உற்பத்தி குறைவால் ஈரோடு மாவட்டத்தில், 200க்கும் மேற்பட்ட நாட்டு சர்க்கரை உற்பத்தி ஆலைகள் மூடப்பட்டுள்ளது.
ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., காலிங்கராயன் ஆகிய பாசன பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. பதிவு செய்த கரும்பை தவிர, மற்ற கரும்புகளை, நாட்டு சர்க்கரை, அச்சு வெல்லம், உருண்டை வெல்ல உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது. கோபி சுற்று வட்டாரத்தில் அய்யம்பாளையம், ஒத்தகுதிரை, கவுந்தபாடி, முள்ளாம்பரப்பு, அவல்பூந்துறை, ஆப்பக்கூடல் உள்ளிட்ட பகுதிகளில் நாட்டு சர்க்கரை, உருண்டை வெல்ல உற்பத்தி ஆலைகள் அதிகளவில் காணப்படுகிறது.
கடந்தாண்டு பருவமழை பொய்த்ததால் கரும்பு உற்பத்தி குறைவாக உள்ளது. வெல்ல உற்பத்திக்கு தேவையான கரும்பு இல்லை. கரும்பு பயிரிட்டிருந்த விவசாயிகள் சிலர், தங்கள் தோட்டத்தில் நேரடியாக வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரை உற்பத்தி செய்தனர். கரும்பு சீஸன் முடிந்து விட்டதால் மாவட்டம் முழுவதும், 200க்கும் மேற்பட்ட ஆலைகள் மூடப்பட்டுள்ளது.
நாட்டு சர்க்கரை உற்பத்தியாளர்கள் கூறியதாவது:
ஈரோடு மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. சென்ற

ஆண்டில் பருவமழை பொய்த்ததால் கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. கரும்பு நடவு செய்தல், அறுவடை பணிக்கு பெண்களுக்கு தினமும், 200 ரூபாய், ஆண்களுக்கு, 400 ரூபாய் வரையும் கூலி வழங்கப்படுகிறது.

கரும்புகள் தற்போது அறுவடை செய்து, வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரை உற்பத்தி செய்யும் பணி சில இடங்களில் மட்டுமே நடக்கிறது. கூலி உயர்வு, கரும்பு பயிரிடுவது குறைந்து விட்டதால் மாவட்டம் முழுவதும் உள்ள, 200க்கும் மேற்பட்ட ஆலைகள் மூடப்பட்டுள்ளது.

ஆலைகள் மூடப்பட்டதால் அச்சு வெல்லம், நாட்டு சர்க்கரை உற்பத்தி குறைவாக உள்ளது.

உற்பத்தி குறைவு காரணமாக சர்க்கரை மார்க்கெட்டுக்கு வரத்து குறைவாக உள்ளது. அச்சு வெல்லம், 30 கிலோ மூட்டை, 900 முதல், 1,050 ரூபாய் வரை, உருண்டை வெல்லம், 60 கிலோ மூட்டை, 1,300 முதல், 1,780 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

நாட்டு சர்க்கரை விலை உற்பத்தி குறைந்து விட்டதால், 60 கிலோ மூட்டைக்கு, 50 ரூபாய் உயர்ந்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## உழவர் தின விழா

ஈரோடு: ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், நேற்று உழவர் தின விழா நடந்தது.

பவானிசாகர் நிலைய தலைவர் துரைசாமி தலைமை வகித்தார்.

மாவட்ட இணை வேளாண்மை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன், வேளாண்மை அலுவலர் பிரசாத், பல்கலை கழக பேராசிரியர்கள் மற்றும் வேளாண்மைதுறை அலுவலர்கள் சிறப்புரை ஆற்றினர். இதில், மண்புழு உரம் தயாரித்தல், தென்னைமரம் ஏறும் கருவி பற்றி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, உழவர் விவாத குழு அமைப்பாளர்கள் கூட்டம், அதன் தலைவர் ராமசாமி தலைமையில் நடந்தது.

உலக தண்ணீர் தின விழா நடத்த வேண்டும், பயிற்சி தொகை, விவசாய வங்கி கடன், கல்வி சுற்றுலா தொகையை உயர்த்த வேண்டும்.

நிலவரி ரத்து செய்தல், பாசனப்பகுதி திட்டத்தில் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும், எனப்பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. சிறந்த உழவர் விவாத குழு அமைப்பாளருக்கு பரிசு வழங்கப்பட்டது. மாவட்ட உழவர் விவாத குழு செயலாளர் வெங்கடாசலபதி நன்றி கூறினார்.

## கோபியில் 18 சதவீதமான பருவமழை

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில், கடந்தாண்டை விட, நடப்பாண்டில், 18 சதவீதமாக பருவமழை குறைந்ததால், கோபியில் வறட்சி தாண்டவமாடுகிறது.

தமிழ்நாட்டில் மழை குறைவாக உள்ள மாவட்டங்களில், ஈரோடு மாவட்டமும் ஒன்றாகும். பவானிசாகர் அணையை நம்பியே ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்ட பாசனங்கள் உள்ளன. கீழ்பவானி பாசனத்தில் இரண்டு லட்சம் ஏக்கர், தடப்பள்ளி, அரக்கன்கோட்டையில், 25 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் உள்ளன. பவானி ஆற்றை நம்பி ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில், நூற்றுக்கும் மேற்பட்ட குடிநீர் திட்டங்கள் உள்ளன.

ஈரோடு மாவட்டத்தில், 50 சதவீத நிலங்கள் ஆற்றுப்பாசனத்தையும், ஏனைய நிலங்கள் பருவமழை நிலத்தடி நீரை நம்பியும் உள்ளது.

கடந்த, 2002-03ம் ஆண்டில் வறட்சி ஏற்பட்டு, பவானிசாகரில் நீர்மட்டம் குறைந்த போது, நீர் திறந்து விடப்பட்டதால் அணையில் மீன்கள் செத்தன. குடிநீருக்கும் சோதனை ஏற்பட்டது. நடப்பாண்டிலும் வறட்சியால் அணையின் நீர்மட்டம் சரிவில் உள்ளது. தென்மேற்கு பருவ மழையை நம்பியே, பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கும். குன்னூர், கோத்தகிரி, அப்பர் பவானி மலைப்பகுதியில், வழக்கமாக கோடையில் பெய்யும் மழையால் நீர் வரத்து அதிகரித்து வறட்சி நீங்கும்.

நடப்பாண்டு தென்மேற்கு, வட கிழக்கு பருவமழை கை கொடுக்காததால் ஒட்டுமொத்த பாசனமும் பாதிக்கப்பட்டது. கோபி பகுதியில் கடந்தாண்டு, 645 மி.மீ., மழை பதிவானது. 2010ல், 124 மி.மீ., 2011ல், 956 மி.மீ., மழை பதிவானது. சராசரி மழையை விட நடப்பாண்டு, 18 சதம் மழை குறைவாக பெய்துள்ளது.

கோபி பகுதியில் சராசரியாக, 200 மி.மீ., மழை பெய்வது வழக்கம். கோடை மழையை பொறுத்தவரை, 2006ல், 152 மி.மீ., 2007ல், 20 மி.மீ., 2008ல், 177 மி.மீ., 2009ல், 191 மி.மீ., 2010ல், 42 மி.மீ., 2011ல், 224 மி.மீ., 2012ல், 57 மி.மீ., மழை பதிவானது.

பொதுவாக, மார்ச், ஏப்ரல் மாதங்களில் கோடை மழை பெய்யும். நடப்பாண்டு மார்ச் மாதம் முடியும் தருவாயில், கோடை மழை பெய்யாததால், கோபி பகுதியில் வறட்சி தாண்டவமாடுகிறது. கோபி, நம்பியூர் யூனியனில், 50 சதவீதம் போர்வெல் நீரின்றி வற்றியது.

நிலத்தடி நீர்மட்டம், 800 முதல் ஆயிரம் அடியை எட்டியுள்ள நிலையில் பெரும்பாலான கிராமங்களில் வறட்சியால், குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இனிவரும் காலத்தில், கோடை மழை கை கொடுக்குமா என்ற எதிர்பார்பில் விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

## மீன் குஞ்சு வளர்க்க விண்ணப்பிக்கலாம்

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் பண்ணை குட்டைகள் அமைத்து அதில் மீன் குஞ்சுகள் மற்றும் மீன் வளர்க்க விரும்பும் டெல்டா பகுதி விவசாயிகள் மாவட்ட கலெக்டருக்கு விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து கலெக்டர் மனோகரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டதால் ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டை போக்கி பயிர்களை பாதுகாக்கும் விதமாக காவிரி டெல்டா பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 181 கோடி ரூபாய் செலவில் விவசாயிகளின் விளை நிலங்களில், 15 ஆயிரம் பண்ணை குட்டைகள் அமைக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அமைக்கப்படும் பண்ணை குட்டைகளில் மீன்குஞ்சு மற்றும் மீன் வளர்க்க தேவையான மீன் குஞ்சு, உணவு, உரம் போன்ற இடுபொருட்கள் மீன்வளத்துறை மூலம் மானியத்தில் வழங்கப்படும். இதன்மூலம் மீன்குஞ்சு வளர்க்க ஒரு பண்ணை குட்டைக்கு 30 ஆயிரம் ரூபாய், மீன் வளர்க்க 17 ஆயிரத்து 500 ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின் கீழ் விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்து தண்ணீர் தட்டுப்பாட்டை போக்கவும், மீன்குஞ்சு மற்றும் மீன்கள் வளர்த்து வருவாயை பெருக்கிக்கொள்ளவும் விரும்பும் டெல்டா பகுதி விவசாயிகள் தங்கள் விண்ணப்பங்களை இம்மாதம் 31ம் தேதிக்குள் மாவட்ட கலெக்டர் அலுவலகத்துக்கு அனுப்பவேண்டும்.

**விவசாய மலர்**

## கொட்டிலில் ஆடு... லட்சங்களில் லாபம்...



கொட்டில் முறை ஆடு வளர்ப்பில் கொழுத்த லாபம் கிடைக்கும் என்கிறார், மதுரை அ.வல்லாளபட்டி, சாம்பிராணிபட்டி விவசாயி சாமி. அவர் கூறியதாவது: மூன்றாண்டுகளுக்கு முன், பங்குதாரர்கள் சிவகாசி, திலகாவுடன் சேர்ந்து ஆறுமாத குட்டியாக, போயர், சிரோகி, ஜமுனாபாரி ரக 22 குட்டிகள் வாங்கினோம். நிலம் என்னிடம் இல்லை. மற்ற இருவரும் நிலம் தந்தார்கள். தரையிலிருந்து பத்தடி உயரத்தில் மரக் கொட்டகை, அதில் ஆறடுக்காய் பிரித்து அறைகளை உருவாக்கினோம். ஒவ்வொரு அறைக்கும் தனியாக இரும்புக் கதவு

செய்யப்பட்டிருக்கும்.

எட்டாவது மாதத்தில் சினைப் பிடிக்கும். கர்ப்பகாலம் ஆறுமாதம். ஒன்று முதல் மூன்று குட்டிகள் வரை ஈனும். அதிகபட்சம் நான்கு முறை குட்டிகள் ஈன்ற ஆட்டை, கழித்து விடுவோம். அவற்றை தனியாக வளர்க்கலாம். அல்லது இறைச்சிக்கு விற்று விடலாம். குட்டி, ஆறுமாதம் வரை தாய்ப்பால் குடிக்கும். ஆறுமாத குட்டியின் எடைக்கேற்ப, பெட்டை கிலோ ரூ.350க்கும், கிடாவை கிலோ ரூ.300க்கும் விற்கிறோம். பத்து பெட்டைகளுக்கு ஒரு கிடா போதும்.

மக்காச்சோளம், கம்பு, கோதுமை மாவு, உளுந்து, துவரை தூசி, தேங்காய் புண்ணாக்கு அனைத்தையும் ஒன்றாக கலந்து, கூழாக்கி வட்டில் வைப்போம். வேலிமசால் அகத்தி, கோ4 புல் ரகங்களை இயந்திரத்தில் பொடியாக நறுக்கி தீவனமாக தருகிறோம். காலையில் எங்களுடைய நிலத்தில், மேய்ச்சலுக்கு விடுவோம். வெயில் வரும் போது, கொட்டிலில் அடைத்து விடுவோம். ஆறுமாதத்திற்கு ஒருமுறை ஒரு லட்ச ரூபாய் வரை லாபமாக கிடைக்கும். என் பேரன்கள் முத்துப்பாண்டி, செல்லப்பாண்டி இருவரும் இளங்குட்டியை, தாயிடம் சரியாக சேர்த்து விடுவர். இடைவெளி விட்டு பலகை அமைத்துள்ளதால், புழுக்கைகள் தரையில் விழுகிறது. தினமும் கொட்டிலை சுத்தம் செய்ய வேண்டும். மாதம் ஒருமுறை கழுவுவோம்.

வெயில் காலத்தில் தண்ணீர் அதிகம் தேவைப்படும். முறையான நோய் தடுப்பு ஊசி போடணும். இருமினால், தும்மினால் மருந்து, பேன் மருந்து, உண்ணி மருந்து தெளிக்கணும். முறையான பராமரிப்பு இருந்தால், லாபமும் நிரந்தரமாக இருக்கும், என்றார். தொடர்புக்கு: 98652 85640.

## சின்னச்சின்ன செய்திகள்



**கடலோர பகுதிக்கேற்ற பழமரங்கள்:**

தமிழகத்தில் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் மண், வளம் குறைந்ததாகவும் களர் உவர் தன்மையின் பாதிப்பு உள்ளதாகவும் காணப்படுகிறது. இப்பகுதிகளில் கிடைக்கும் பாசனநீர் பெரும்பாலும் தரம் குறைந்ததாக, பலவித உப்புக்கள் கொண்டதாக, குறிப்பாக விவசாயப் பயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சோடியம், மக்னீசியம் ஆகியவற்றின் குளோரைடு,

கார்பனேட், பைகார்பனேட், சல்பேட் கொண்டதாக இருக்கின்றன. இப்பகுதிகளில் பருவமழை பொய்த்துவிடும் காலத்தில் ஏற்படும் வறட்சியாலும் பயிர்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. கடலோரப் பகுதிகளில் 40-45 சதவீதம் மானாவாரி நிலங்களாக உள்ளன. இப்பகுதிகளில் விவசாயிகள் பழமரங்களை சாகுபடி செய்தால் நிலையான வருமானம் பெறமுடியும். இலந்தை, பெருநெல்லி, சப்போட்டா, மா, கொய்யா, புளி, சீத்தா, நாவல், கொடுக்காபுளி, வில்வம் ஆகிய பழமரங்கள் கடலோர பகுதிகளில் சாகுபடி செய்ய ஏற்ற மரங்களாகும்.

**இலந்தை:**

மானாவாரி பழ மரங்களின் அரசன் என்றுஅழைக்கப் படும்இலந்தை களர், உவர் நிலங்கள், வறட்சியான நிலங்கள், நீர் தேங்கும் நிலங்கள் என்று அனைத்து பிரச்னைக்குரிய நிலங்களிலும் நன்கு வளர்ந்து விளைச்சலை தரவல்லது. இலந்தை கார, அமிலத்தன்மை 9 வரையில் நன்கு வளரும். அதிக விளைச்சல் தரும் ரகங்கள் கைத்தளி, பனாரசி, உம்ரான், கோலா செப், முண்டியா ஆகியவை பயிரிட ஏற்றவை. பழத்தோட்டம் அமைக்கும் போது இரண்டுக்கும் மேற்பட்ட ரகங்களை பயிரிடுவது மிகவும் அவசியம். மொட்டுக் கட்டப்பட்ட செடிகளை 6து8மீட்டர் இடைவெளியில் 1 மீ நீளம், அகலம், ஆழம் உள்ள குழிகளில் நடவேண்டும். முறையான கவாத்தை பிப்ரவரி - மார்ச் மாதங்களில் செய்யும்போது ஆகஸ்ட் முதல் பிப்ரவரி வரை பழங்கள் கிடைக்கும். மரத்திற்கு 60-70 கிலோ பழங்கள் விளைச்சலாக கிடைக்கும். பழங்கள் மிகவும் சத்துமிக்கவை. பழரசம், ஊறுகாய், ஜாம், மிட்டாய், ஜெல்லி ஆகியவை தயாரிக்கப் படுகிறது.

**புளி:**

கடலோர சாகுபடியில் அங்கம் வகிக்கும் முக்கியமான மரம் புளி ஆகும். வறட்சி மற்றும் களர், உவர் நிலங்களிலும் நன்கு வளரும். விதைகள் மூலமும் ஒட்டுச்செடிகள் மூலமும் இனப்பெருக்கம் செய்யப் படுகிறது. ஒட்டுச்செடிகள் 5 வருடங்களில் பலன் அளிக்கத் தொடங்கும். ஒட்டுச்செடிகள் 8 மீ இடைவெளியில் 75 செ.மீ. நீளம், அகலம், ஆழம் உள்ள குழிகளில் நடவேண்டும். மானாவாரியாக பயிரிடுவதைவிட இறவையில் பயிரிடும்போது அதிக விளைச்சல் அளிக்கக்கூடியது. ஒரு மரத்திலிருந்து 150 கிலோ வரை பழங்கள் கிடைக்கும். பி.கே.எம்.1 என்ற ரகம் அதிக விளைச்சலை தரவல்லது.

**கொடுக்காபுளி:**

கொடுக்காப்புளியை காற்றுத்தடுப்பாகவும், மண் அரிப்பைத் தடுக்கவும் பயன் படுத்தலாம். செடிகள் பொதுவாக விதைகளிலிருந்தோ அல்லது பதியன்கள் மூலமாகவோ இனப் பெருக்கம் செய்யப்படுகிறது. செடிகள் 8 முதல் 10மீ இடைவெளியில் 1மீ நீளம், அகலம், ஆழம் உள்ள குழிகளில் நட ஏற்றது. நன்கு வளர்ந்த மரங்கள் மரம் ஒன்றுக்கு 30 கிலோ பழங்கள் வரை அளிக்கின்றன. மரங்கள் பெரும்பாலும் ஜனவரி மாதங்களில் பூத்து, ஏப்ரல், ஜூன் மாதங்களில் அறுவடைக்கு வருகின்றன. சதைப்பற்றுள்ள பழங்கள் அவற்றின் சுவைக்காக விரும்பி உண்ணப் படுகின்றன. விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் சோப்பு தயாரிக்க பயன்படுகிறது. புண்ணாக்கு மற்றும் இலைகள் கால்நடைத் தீவனமாக பயன்படுகிறது.

**வில்வம்:**

மருத்துவ குணம் நிறைந்த வில்வமரம் பிற பயிர்கள் வளர முடியாத இடத்திலும் மிதவெப்ப பகுதிகளிலும் நன்கு வளர்ந்து நல்ல விளைச்சல் அளிக்கக்கூடியது. அதிகமான கார அமிலத்தன்மை உடைய நிலங்களிலும் அதிகமான ஈரக்கசிவு உள்ள இடங்களிலும் வளரக் கூடியது. சிறந்த சாகுபடிக்கு மணற் பாங்கான நிலம் ஏற்றது. மொட்டுக் கட்டுதல் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. செடிகளை 8 மீட்டர் இடைவெளியில் 1 மீ நீளம், அகலம், ஆழம் உள்ள குழிகளில் நடவேண்டும். மொட்டுக்கன்றுகள் 4 முதல் 5 வருடங்களில் பலன்தர ஆம்பிக்கின்றன. மரம் ஒன்றுக்கு 700 கிலோ வரை விளைச்சல் கிடைக்கிறது. பழங்கள் சர்பத், மார்மலேடு செய்ய பயன்படுகிறது. மரம் வேளாண் கருவிகள் செய்யவும் மரக்கூழ் காகிதம் செய்யவும் பயன்படுகிறது. இலைகள் பூஜைக்கு பயன்படுத்தப்படுகிறது.

**பெருநெல்லி:**

வறட்சி, கரிசல் நிலங் களில் வளர்ந்து நல்ல பலன் தரவல்லது. செம்மண், மணற் பாங்கான நிலங்களிலும் வளரும் தன்மையுள்ளது. பனாரசி, சாக்கையா, கிருஷ்ணா, காஞ்சன், என்.ஏ.7 ஆகியவை சிறந்த ரகங்களாகும். மொட்டுக்கட்டப்பட்ட செடிகள் 5 முதல் 6 மீ இடைவெளியில் 1 மீ நீளம், அகலம், ஆழம் உள்ள குழிகளில் நடவேண்டும். 1 மீ உயரம் வரை ஒரே குச்சியாக வளர்த்து பின்னர் அனைத்து திசைகளிலும் கிளைகளைப் பரவ விடவேண்டும்.
(தகவல்: முனைவர் சி.கவிதா, வ.கணேசராஜா, வேளாண்மை அறிவியல் நிலையம், ராமநாதபுரம்-623 503. 04567-230 250).

## காலத்தில் கைகொடுத்த தர்பூசணி சாகுபடி



**சாகுபடி பட்டம்:**

தர்பூசணி சாகுபடிக்கு ஜனவரி - மார்ச் சிறந்த பட்டம். இந்த பட்டத்தில் அனைவராலும் எளிதில் சாகுபடி செய்துவிடலாம். இதில் வியாபார பிரச்னை கிடையாது. திறமையான விவசாயிகள் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களிலும் தர்பூசணி சாகுபடி செய்கிறார்கள். இதற்கு நிழல் வலை, நிலப்போர்வை முறைகளை பின்பற்ற வேண்டும்.

**விதை:**

ஒட்டு வீரிய ரகங்கள் எஸ்பிடபிள்யூ10 மார்க்கெட்டில் புழக்கத்தில் உள்ளது. ஒரு ஏக்கருக்கு 500 கிராம் விதைகள் தேவை. விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகள்தான் விற்பனைக்கு வருகின்றது. தனது அனுபவத்தில் எஸ்பிடபிள்யூ10 என்ற ரகம் மிகச்சிறந்தது என்கிறார் வேளாண் வித்தகர் ஆர்.பாண்டியன் (131-132, செஞ்சி ரோடு, திண்டிவனம் -604 001, 98423 23075).

**தொழு உரம்:**

ஆட்டு எரு அவ்வருடம், மாட்டு எரு மறு வருடம் என்பது பழமொழி. ரசாயன உரங்கள் அளித்தாலும் அவற்றை எடுத்து கொடுக்க தொழு உரம் போன்ற இயற்கை உரங்கள் அவசியம் தேவை. ரசாயன உரம் என்றால் 48:24:24 என்ற விகித அளவில் தழை:மணி:சாம்பல் அளிக்க வேண்டும். தழைச்சத்தை நான்கு முறையாக மேல் உரத்தில் அளிக்க வேண்டும். மணி:சாம்பல் அடி உரமாக அளிக்க வேண்டும்.

**பார்சால் முறை:**

பார்கள் அமைத்து பார்களின் இரு கரைகளிலும் இரண்டு அடி இடைவெளியில் செடிகள் இருக்கும் வகையில் விதைப்பு செய்யலாம். குழிமுறை, பழைய முறை. இதில் ஆறு அடி இடைவெளி விட்டு

குழிக்கு ஆறு விதை வீதம் நடவு செய்யலாம். விதைப்பு அன்று அவசியம் வயலை சுற்றி கார்போ ப்யூரிடான் அல்லது போரேட் பூச்சிக் கொல்லி மருந்தை வயலை சுற்றி போடவேண்டும். அப்போதுதான் விதைப்பு செய்தவுடன் விதையில் உள்ள இனிப்பு சத்தால் கவரப்பட்டு, அணில் விதைகளை அப்படியே உரித்து சாப்பிட்டுவிடும். இதை எளிதாக கட்டுப்படுத்ததான் மேலே சொன்ன முறையை பின்பற்ற வேண்டும்.

**முளைப்பு:**

ஐந்து முதல் ஏழு நாட்களுக்குள் விதைகள் முளைத்துவிடும். 15 நாள் வரை உயிர் தண்ணீர் சிறிது சிறிதாக ஊற்ற வேண்டும். பின்னர் நிலத்தின் தன்மைக்கு ஏற்ப பாய்ச்சலும் காய்ச்சலும் முறையில் நீர் நிர்வாகம் செய்ய வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு:**

முதல் 15 நாட்கள் வரை சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் இருக்கும். இதைக் கட்டுப்படுத்த மித்தைல் டெமட்டான் பூச்சிக்கொல்லி 300 மில்லி + வேப்ப எண்ணெய் 500 மில்லி கலந்து தெளித்து பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம். 30 நாட்கள் இருக்கும்போது குயினால் பாஸ் 500 மில்லி, கார்பண்டிசம் 200 கிராம் நோய் மருந்து தெளிக்க வேண்டும். பயிர் ஊக்கி ஜிப்ரலிக் அமிலம் தெளிக்கலாம். வயது 70 நாட்கள் பயிர் என்பதால் இதுபோன்ற பூஸ்டர் திரவங்கள் தெளிப்பதால்தான் மகசூல் அதிகரிக்க முடியும்.

**நுனி கிள்ளுதல்:**

சில விவசாயிகள் ஒரு செடிக்கு இரண்டு காய்கள் வீதம் விட்ட பின்னர் 50 நாட்கள் மேல் வரும் பிஞ்சுகளை அகற்றுகின்றனர். அதனால் மகசூல் கூடுதலாக கிடைக்கின்றது.

**வீரிய ரகம்:**

அர்காமானிக் 10 வருடங்களுக்கு முன்னால் வந்தது. அது தற்போது மார்க்கெட்டில் இல்லை. வீரிய ரகம் அனைத்தும் 5000 கி.மீ. தூரம் எட்டு நாட்கள் பயணம் செய்யும் வகையில் ஒரு அங்குலம் சதைப்பற்று கொண்டது. அதனால் வியாபாரிகள் 15 நாட்கள் வைத்திருந்து விற்பனை செய்யலாம். விவசாயிகளும் சற்று விலையைப் பார்த்து விற்பனை செய்யலாம். அறுவடை வயது பொதுவாக 70 நாட்களில் அனைத்து ரகங்களும் அறுவடைக்கு வந்துவிடும்.

**அறுவடை:**

செடிகளின் இலைகள் மஞ்சள் நிறம் மாறுதல், காய்களை தட்டிப்பார்த்தால் மத்தளம் போன்ற ஒலி கேட்கும். அதை வைத்தும் அறுவடை செய்யலாம்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

21.03.2013 A.M

## தேயிலைதூள் விலை கிலோவுக்கு ரூ.3 அதிகரிப்பு



குன்னூர் : குன்னூர் அரசு கூட்டுறவு ஏல மையத்தில் இந்தஆண்டுக்கான 12 வது தேயிலை ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. மொத்தம் 3 லட்சத்து 90,448 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் ஒரு லட்சத்து 48,693 கிலோவும், டஸ்ட்ரகம் ஒரு லட்சத்து 41,755 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்ளூர் வர்த்தகர்கள் அதிகளவில் கலந்து கொண்டனர்.

தேயிலை தூள் வரத்து குறைவாக இருந்ததால் வர்த்தகர்கள் போட்டி போட்டு கொள்முதல் செய்தனர். இதனால், தேயிலை தூள் முழுவதும் விற்பனையானது. விலையும் கிலோவுக்கு ரூ.3 வரை அதிகரித்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோவுக்கு ரூ.92 முதல் ரூ.98 வரையிலும், உயர்வகை கிலோவுக்கு ரூ.100 முதல் ரூ.108 வரையிலும் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.95 முதல் ரூ.98 வரையிலும், உயர்வகை கிலோ ரூ.110 முதல் ரூ.116 வரையிலும் விலை கிடைத்தது.

## கோதுமை ஏற்றுமதிக்காக எகிப்திடம் பேச்சுவார்த்தை



புதுடெல்லி : கோதுமை ஏற்றுமதி தொடர்பாக எகிப்திடம் பேச்சுவார்த்தை நடக்கிறது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா கூறியுள்ளார்.

டெல்லி வந்துள்ள எகிப்து அதிபர் முகமது முர்ஷியை, அமைச்சர் ஆனந்த் சர்மா நேற்று சந்தித்து பேசினார்.

அதைத் தொடர்ந்து அவர் அளித்த பேட்டியில், ''கோதுமை ஏற்றுமதி தொடர்பாக எகிப்திடம் பேச்சுவார்த்தை நடக்கிறது. ஆனால், எவ்வளவு ஏற்றுமதி செய்யப்படும் உள்ளிட்ட விவரங்களை உடனடியாக கூற முடியாது. மேலும் இந்திய பருத்திக் கழகம் தன்னுடைய கையிருப்பை வெளிச்சந்தையில் விற்பனை செய்ய உள்ளது'' என்றார்.

## நடப்பு நிதியாண்டில் வெங்காயம் உற்பத்தி 4 சதவீதம் குறையும்



புதுடெல்லி : நடப்பு நிதியாண்டில் வெங்காயம் உற்பத்தி 4 சதவீதம் குறைந்து 168.17 லட்சம் டன்னாக இருக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து, மத்திய வேளாண்துறை இணையமைச்சர் தாரிக் அன்வர் நேற்று மக்களவையில் கூறியதாவது: நடப்பு 2012,13ம் நிதியாண்டில் வெங்காயம் உற்பத்தி 4 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த

2011,12ம் ஆண்டில் 175.11 லட்சம் டன் வெங்காயம் உற்பத்தியான நிலையில், தற்போது 168.17 லட்சம் டன் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது மொத்தவிலைச் சந்தையில், ஒரு குவிண்டால் வெங்காயம் ரூ.936 முதல் ரூ.1,746 வரை விற்கப்படுகிறது.

வெங்காயம் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மகாராஷ்டிராவில் கடந்த ஆண்டில் 56.38 டன் உற்பத்தியானது. நடப்பு நிதியாண்டில் இது 45.46 லட்சம் டன்னாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம், கர்நாடகா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இந்த ஆண்டு உற்பத்தி அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## சொட்டுநீர் பாசனத்தில் அதிகாரிகள் வழிகாட்டுதல் முழுமையாக இல்லை குறைதீர்ப்பு கூட்டத்தில் விவசாயிகள் புகார்

மதுரை, : சொட்டு நீர் பாசனத்தில் அதிகாரிகளின் வழிகாட்டுதல் முழு மையாக இல்லை என்று குறைதீர்ப்பு கூட்டத்தில் விவசாயிகள் குற்றம்சாட்டினர்.
மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலவலகத்தில் நடந்தது. கலெக் டர் அன்சுல்மிஸ்ரா தலைமை வகித்தார். விவசாயிகள் பேசியதாவது:
வறட்சி கணக்கீட்டில் மாவட்டத்தில் பல ஹெக் டேர் நிலம் விடுபட்டுள் ளது. அனைவருக்கும் வறட்சி நிவாரண நிதி வழங்க வேண் டும். விவசாயிகள் பயிர் காப்பீடு செய்துள்ளோம். ஆனால் 22நாள் மட்டுமே தண்ணீர் வந்தது. இதனால் சரியாக விவசாய பணிகள் நடை பெற வில்லை. எனவே விவசாய நஷ்டத்திற்கான காப்பீடு தர வேண் டும். கூட்டுறவு தேர்தலை தள்ளி வைக்க வேண்டும். கூட்டுறவு வங்கியில் விவ சாய கடனுக்கு தற்போது நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. விவசாயம் செய்யாத நிலையில் எப்படி கடனை அடைக்க முடியும். நோட்டீ சை ரத்து செய்ய வேண்டும்.
வைகை அணையை தூர்வார வேண்டும். இல்லையென்றால், விவசாயம் மட்டுமல்லாது குடிநீர் பிரச்னையும் ஏற்படும். சட்டத்திற்கு புறம்பாக கிரானைட், மணல் மற்றும் கல் வெட்டி எடுப்பது ஆக்கிரமிப்பு செய்வது தொடர்பாக விவசாயிகள் புகார் கூறினால், வருவாய்த்துறையினர் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் யார் புகார் கொடுத்துள்ளனர் என சம்பந்தப்பட்ட நபர்களிடம் பெயர் முகவரியை தெரிவிக்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு சிக்கல் எழுகிறது.
சொட்டுநீர் பாசன முறையை பின்பற்ற வேளாண்துறை அதிகாரி கள் வழிகாட்டுதல் இல்லை. நாங்களே நேரடியாக சென்று அதிகாரிகளிடம் மான்யத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க

கேட்டா லும் கண்டு கொள்வதில்லை.

இவ்வாறு பேசினர்.

கலெக்டர் பேசுகையில், வறட்சி குறித்து விடுபட்ட பகுதியை சேர்த்து கொள்ள லாம். கூட்டுறவு தேர்தலை தள்ளி வைக்க முடியாது. சட்ட விரோத மாக நடக்கும் செயல் குறித்து விவசாயிகள் புகார் தெரிவித்தால், அரசு அலுவலர்கள் கண்டிப்பாக அவர் பெயர் முகவரியை குற்றவாளிகளுக்கு தெரிவிக்க கூடாது. நாம் போலீஸ் அல்ல. அவர்களுக்குதான் புகார்தாரர் பெயர் தேவை, நமக்கு தேவையில்லை.  ஆக்கிரமிப்பில் இருக்கும் அனைத்து கண்மாய், குளம், கால்வாய்கள் கணக்கெடுத்து உடனடியாக ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும். கண்மாயில் மீன் ஏலம் விடுவது நிறுத்தி வைக்கப்படுகிறது, என்றார்.

இணைப்பதிவாளர் பழனிவேல் பேசுகையில், விவசாய கடன் தொடர்பாக நோட்டீஸ் அனுப்புவது வழக்கமான நடவடிக்கை மட்டுமே. நோட்டீஸ் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என கூட்டுறவு சங்கத்திற்கு அறிவுறுத்தப்படும், என்றார். மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஜான் லூயிஸ், கலெக்டரின் நேர் முக உதவியாளர் (விவசா யம்) ஜெய்சிங்ஞானதுரை, இணை பதிவாளர் பழனி வேல், வேளாண்மை இணை இயக்குநர் ராஜேந்திரன் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## 25ம்தேதி கூட்டு ஆலோசனை சிறுவாணி அணையில் வறட்சி இரு மாநில அதிகாரிகள் சந்திப்பு

கோவை, : சிறுவாணி அணை நிலவரம் தொடர்பாக வரும் 25ம் தேதி இரு மாநில அதிகாரிகள் ஆலோசனை கூட்டம் நடக்கவுள்ளது.

தமிழக கேரள எல்லையில் மேற்கு தொடர்ச்சி மலையில் சிறுவாணி அணை அமைந்துள்ளது. 22.47சதுர கி.மீ பரப்பில் நீர் தேக்க திறன் உள்ள சிறுவாணி அணையின் நீர்தேக்க உயரம் 15 மீட்டர். அணை நிரம்பினால் தொடர்ந்து 281 நாட்களுக்கு குடிநீர் பெற முடியும். அணையில் இருந்து தினமும் 9.7 கோடி லிட்டர் குடிநீர் எடுக்க முடியும். அணை வறண்டு விட்டதால் தினமும் 3 கோடி லிட்டர் குடிநீர் பெறுவது கூட சிரமமாக இருக்கிறது. அணையின் இறுதி இருப்பு நீரை (டெத் ஸ்டோரேஜ்) பெற கோவை குடிநீர் வடிகால் வாரியத்தினர் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர். அணையில் ஆங்காங்கே குட்டை போல் நீர் தேங்கியுள்ளது. இந்த குட்டை நீரை உறிஞ்சி எடுத்தால் மேலும் 20 நாளுக்கு குடிநீர் பெற முடியும்.

ஆனால் அணையின் நீர் தேக்க பகுதியில் மோட்டார் வைத்து அணை நீரை உறிஞ்ச கேரள நீர்பாசனத்துறை தடை விதித்து விட்டது. தற்போது அணை நீரேற்று நிலையத்தில் உள்ள

சிறிதளவு நீர் உறிஞ்சி எடுக்கப்பட்டு வருகிறது. இந்த தண்ணீரை 1 வாரம் மட்டுமே பெற முடியும் என்ற நிலையிருக்கிறது. அணையின் நீர் தேக்க குட்டையில் உள்ள நீரை பெற வரும் 25ம் தேதி கேரள மாநிலம் பாலக்காட்டில் மாவட்ட நீர்பாசனத்துறை அலுவலகத்தில் சிறுவாணி தொடர்பான கலந்தாய்வு கூட்டு ஆலோசனை கூட்டம் நடக்கவுள்ளது. இதில் கோவை மண்டல குடிநீர் வடிகால் வாரிய தலைமை பொறியாளர் (பொறுப்பு) நாகராஜன், துணை மேற்பார்வை பொறியாளர் பாலக்குமார், சிறுவாணி பிரிவு செயற்பொறியாளர் நாகராஜ், கேரள நீர்பாசனத்துறை தலைமை பொறியாளர் லத்திகா உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.
அணையில் இறுதி கட்ட இருப்பு நீர் வன விலங்குகளின் குடிநீர் தேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த குடிநீரை எடுத்தால் வன விலங்குகள் குடிநீரின்றி தவிக்கும் வாய்ப்புள்ளது. எனவே வன விலங்குகளுக்கு சிறிதளவு நீரை ஒதுக்கீடு செய்து மீதமுள்ள நீரை மோட்டார் மூலமாக உறிஞ்சி பெற கேரள அரசிடம் அனுமதி கோரப்படும். கடந்த 31 ஆண்டுகளில், சிறுவாணி அணை இதுபோன்ற வறட்சி நிலையை எட்டவில்லை. இறுதி இருப்பு நீரை உறிஞ்சி பெறும் வாய்ப்பு இதுவரை உருவாகவில்லை. கடந்த 2003ம் ஆண்டில் அணையில் வறட்சி ஏற்பட்டது. இறுதி இருப்பு நிலையை அணை நீர் மட்டம் எட்டியபோது கனமழை பெய்தது. ஒரேநாளில் அணை நீர் மட்டம் உயர்ந்து விட்டது. தற்போது வெயில் தாக்கம் அதிகமாக இருக்கிறது. பருவ மழைக்கு மேலும் 2 மாதங்கள் இருக்கிறது. எனவே அணை நீர் மட்டம் உயர வாய்ப்பில்லை. இருக்கும் குடிநீரை பெற்று வினியோகம் செய்ய குடிநீர் வடிகால் வாரியம் முயற்சி செய்து வருகிறது.

## விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் 22ம் தேதி நடக்கிறது

சேலம், : சேலம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாதம் தோறும் நடந்து வருகிறது. இந்த வகையில் நடப்பு மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வரும் 22ம் தேதி காலை 10.30 மணிக்கு சேலம் மாவட்ட கலெக்டர் மகரபூஷணம் தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. இதில் விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பான தங்கள் குறைகளை நேரிலும் விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம்' என்று கலெக்டர் மகரபூஷணம் அறிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

21.03.2013 A.M

## நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் தரமான தேயிலை உற்பத்தி மேற்கொள்ள ரூ.6 கோடியில் உலர் எந்திரங்கள்

மஞ்சூர்,

நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் தரமான தேயிலையை உற்பத்தி மேற்கொள்ள ரூ.6 கோடியில் புதிய 'டிரையர்கள்' (உலர் எந்திரங்கள்) அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாககுன்னூர் இன்கோ சர்வ் பொது மேலாளர் கல்யாண சுந்தரம் தெரிவித்தார்.

கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள்

நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றது. இந்த தொழிற்சாலைகளில் சுமார் 22 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களிடம் இருந்து தினசரி கொள்முதல் செய்யப்படும் பச்சை தேயிலை மூலம் இந்த தொழிற்சாலை களில் தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த நிலையில், மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டு உள்ள இயந்திரங்கள் 30 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானதாகவும், இயந்திரங்களின் திறன் குறைந்தும் காணப்படு கிறது.

விவசாயிகள் பாதிப்பு

இதன் காரணமாக தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் செலவினங்களும் அதிகரித்து வருகின்றன. மேலும், பச்சை தேயிலை வரத்து அதிகமாக உள்ள சீசன் காலங்களில் கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கு வரும் அதிகபடியான பச்சை தேயிலையை அரைக்க முடியாமல் ஊழியர்கள் திண்டாடி வருகின்றனர். இதன் காரணமாக பச்சை தேயிலை

கொள்முதலில் கோட்டா முறை கையாளப்படுகிறது. இதனால், விவசாயிகள் பாதிப்படைந்து உள்ளனர்.

இதையடுத்து, கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் அதிகரித்து வரும் செலவினங்களை கட்டுப்படுத்தவும், பழுதடைந்து காணப்படும் எந்திரங்களை அகற்றி புதிய இயந்திரங்களை அமைக்கவும், தரமான தேயிலை உற்பத்தி மற்றும் சீசன் காலங்களில் விவசாயிகளிடமிருந்து முழு அளவிலான பச்சை தேயிலையை கொள்முதல் செய்யவும் தேயிலை விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உள்ள பழுதடைந்த மற்றும் திறன் குறைந்த இயந்திரங்களை அகற்றி புதிய எந்திரங்களை அமைக்க ரூ.6 கோடி வழங்க உத்தரவிட்டார். இதுகுறித்து குன்னூர் இன்கோசர்வ் பொது மேலாளர் கல்யாண சுந்தரம் நிருபர்களிடம் கூறியதாவது:–

ரூ.6 கோடியில் புதிய இயந்திரங்கள்

நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் இயங்கி வருகிறது.இந்த தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டு உள்ள இயந்திரங்கள் பழுதடைந்தும், அரவை திறன் குறைந்தும் உள்ளது. இதையடுத்து, நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழக முதல்– அமைச்சர் ஜெயலலிதா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை நவீனப்படுத்த ரூ.6 கோடி ஒதுக்கி உள்ளார்.

இதில், பழுதடைந்த உலர் இயந்திரங்கள் (டிரையர்கள்), சி.டி.சி. இயந்திரம், ஜேனரேட் டர் மற்றும் புதிய டிரான்ஸ் பார்மர்கள் அமைப்பதற்காக குந்தா (எடக்காடு) தேயிலை தொழிற்சாலைக்கு ரூ.42 லட் சம், கரும்பாலம் தொழிற் சாலைக்கு ரூ.41 லட்சம், மேற்கு நாடு ரூ.38 லட்சம், மகாலிங்கம் ரூ.60 லட்சம், மஞ்சூர் ரூ.38 லட்சம், இத்தலார் ரூ.57 லட்சம், பந்தலூர் ரூ.54 லட்சம், கைக்காட்டி ரூ.26 லட்சம், கட்டபெட்டு ரூ.55 லட்சம், சாலீஸ்பெரி ரூ.23 லட்சம், பிராண்டியர் ரூ.37 லட்சம், கிண்ணக் கொரை ரூ.45 லட் சம், பிக்கட்டி ரூ.50 லட்சம், எப்பநாடு ரூ.17 லட்சம், பிதிர் காடு ரூ.17 லட்சம் வழங்கப்பட்டு உள்ளது. இந்த பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.